பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 26 (8—6—68) சனி ★ வெளியூர்: வைகாசி 27 ஞாயிறு (9—6—68) [இதழ்: 298

சனநாயகத்தின் மீதே தாக்குதல்!

இலண்டன், சூன் 8—

"இராபர்ட் கென்னடியைத் தாக்கிய குண்டுகள், சனநாயகத்தையே குறி வைத்துத் தாக்கியதாக ஆகும்; இந்த மிருகத்தனமான கொலைச் செயலை எண்ணி ஒவ்வொரு குடும்பமும் கண்ணீர் விடுகிறது; இச்செயல், ஒரு குடும்பத்தின் அல்லது ஒரு நாட்டின் துக்கம் மட்டுமல்ல"

என்று, பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன், டெலிவிஷன்மூலம் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டாட்சி அமைப்பின் இலக்கணம் --- அண்ணா விளக்கம்

உரிமைக் குரல் எழுப்புவது மாநிலங்களின் கடமை

உதவி கேட்பதன் அவசியத்தை டெல்லி உணர வேண்டும்

ஏற்றத்தாழ்வில்லாமல் பார்த்துக் கொள்வது மத்திய அரசின் பொறுப்பு

சென்னை, சூன் 8—

"நாட்டின் எந்த ஒரு பகுதியும் முன்னேற்றமடையாமலும் இருந்தால், அதனால், முன்னேறாத பகுதிக்கு மட்டும் நட்டமில்லை—நாடு முழுவதுமே அதனால் நட்டமடைகிறது; எனவே, முன்னேற்றத்திற்கான திட்டங்கள் போடப்பட்டு அதற்கு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்கப்படும்போது உதவியை மத்திய அரசு இந்தக் கண்ணோட்டத்தில் வழங்கவேண்டும்.

"நாட்டின் கூட்டாட்சி அமைப்பைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பிலும் முன்னேற்றம் நியாயமாகவும், ஏற்றத்தாழ்வின்றியும் ஏற்படுமாறு பார்த்துக்கொள்ள அரசு கடமைப்பட்டிருக்கிறது.

"இந்த மனப்பான்மை மத்திய அரசுக்கு தானாகவே ஏற்படவேண்டும். குறைகளை எடுத்து உணர்த்தினால், 'மத்திய அரசுக்கும்— மாநில அரசுகளுக்குமிடையில் மனக் கசப்பு ஏற்படும்' எனக் கூறப்படுகிறது; ஆனால், மாநிலங்கள், தங்களுடைய நியாயமான உரிமைகளைக் கேட்பது அவற்றின் கடமையாகும்; இதனால் மனக் கசப்பு ஏற்பட்டுவிடுமென்று நினைப்பது தவறானதாகும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னைத் துறைமுக அலுவலகக் கட்டிடங்களின் திறப்புவிழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் தெள்ளத் தெளியச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

சென்னைத் துறைமுக அலுவலகத்துக்கு ரூ 27½ இலட்சம் செலவில் புதிதாக நான்கு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன

இந்த கட்டிடங்களின் திறப்பு விழா நேற்று மாலை சென்னை—ஜார்ஜ் டவுனில் உள்ள துறைமுக அலுவலகத்தில் நடந்தது.

மத்திய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சர் வி.கே.ஆர் வி. ராவ், விழாவில் கலந்துகொண்டார்.

பொருள்என்ன அதற்கு?

விழாவுக்குத் தலைமைதாங்கிய முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையாவது:—

"ஒரு நாட்டில் துறைமுகங்கள் வளர்ச்சி அடைந்தால், அந்த நாடு, 'வளமிக்க நாடு' என்று புரிந்துகொள்ளலாம்.

துறைமுகம் வளர்ச்சி அடைகிறது என்றால், 'அந்த நாட்டில் வாணிபம் வளர்கிறது' என்று பொருளாகும்.

எதிர்பார்க்கும் நி[illegible]

சென்[illegible]

[illegible] எதிர்பார்க்கு[illegible] யிலேயே நாம் இ[illegible] [illegible]ரும்.

துறைமுக வளர்ச்சிக்குத் தமிழக அரசு தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்து வருகிறது.

உறுதுணையாக இருக்குமா?

விழாவுக்கு வருகை தந்துள்ள போக்குவரத்து அமைச்சர் வி. கே ஆர். வி. ராவ் அவர்களின் பெரும் உதவியினால் தான் தூத்துக்குடி துறைமுகம் உறுதி செய்யப்பட்டது.

தமிழகத்தின் முன்னேற்றம் இந்தியாவின் முன்னேற்றம் ஆகும். நாட்டில் எல்லா வசதிகளும் இருந்தும், ஒரு பகுதி முன்னேறாவிட்டால் அது இந்தியாவுக்கே நட்டமாகும்.

ஆகவே, முன்னேற வசதி உள்ள பகுதிகளுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்க வேண்டும்.

மாநில அரசுக்கு உள்ள உரிமை அது!

[illegible] ன்னேறு [illegible] எடுத் [illegible] லத்துக் [illegible] மாதல் [illegible] 'மனக் [illegible] என்றும் [illegible] ள்.

[illegible] க்காகத்தான், [illegible] அரசு—டெல்லி அரசு' [illegible] அமைப்புகள் உள்ளன; மாநில அரசு இல்லாவிட்டால், மத்திய அரசு இல்லை; எனவே, முன்னேற இருக்கும் வாய்ப்புகளை எடுத்துச் சொல்ல மாநில அரசுக்கு உரிமை உண்டு.

அறிவிப்பு

திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு, 10—6—68 திங்கட்சிழமை நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 11—6—68 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

இடுப்பில் இருக்கும் வேட்டி அவிழும்போது எப்படி கை நம்மை அறியாமலேயே உதவிக்கு வருகிறதோ, அதைப் போல், மாநில அரசுக்குத் துன்பம் ஏற்படும்போது டில்லி உதவிக்கு வர வேண்டும்.

எப்படி உறுதி செய்யப்பட்டது?

தூத்துக்குடித் துறைமுகம் பற்றி நான் மத்திய அமைச்சர் ராவிடம் பேசியபோது, 'தூத்துக்குடித் துறைமுகத்தால் நட்டம் ஏற்பட்டால், அதில் பங்கு ஏற்பீர்களா?' என்று என்னிடம் அவர் கேட்டார்; நான் அவரிடம், 'தூத்துக்குடித் துறைமுகத்தால் நல்ல வருமானம் கிடைக்கும்; அப்படி நட்டம் ஏற்பட்டால் அதில் மாநில அரசு பங்கு ஏற்கும்' என்று கூறினேன். அதன் பிறகுதான் தூத்துக்குடித் துறைமுகம் உறுதி செய்யப்பட்டது.

தூத்துக்குடித் துறைமுகத்துக்கு இந்த ஆண்டு ஒதுக்கிய பணத்தைவிட அடுத்த ஆண்டு அதிக பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடுத்த பணத்தை சரியான முறையில் செய்வதில் தமிழக அரசு முதலிடம் வகிக்கிறது!

செலவு செய்த பணத்துக்கு தகுந்த பயனையும் தமிழக அரசு ஈட்டித் தருகிறது!

எனவே, கொடுத்த பணத்தை வீண் விரயம் செய்யாத அரசு—'செட்டாக'ப் பணத்தை செலவழிக்கும் அரசு—கொடுத்த பணத்துக்கு மிகுந்த பயன்தரும் காரியத்தில் ஈடுபடும் அரசு அதிக பணம் கேட்கிறது என்பதை மனதில் கொண்டு, தூத்துக்குடித் துறைமுகத்துக்கு அதிக பணம் ஒதுக்க வேண்டும்."

கேட்டதை டெல்லி கொடுத்திருந்தால்....

'கேரளத்தின் தேவையை தமிழகமே நிறைவு செய்திருக்கும்'

அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

திருவனந்தபுரம், சூன் 8—

"உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தமிழக அரசு மத்திய அரசிடம் ரூ. 20 கோடி உதவி கேட்டது; இத்தொகையை மத்திய அரசு அளித்திருந்தால், கேரளத்தின் உணவுத் தேவையைத் தமிழகமே நிறைவு செய்திருக்கும்"

என்று தமிழக உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், திருவனந்தபுரம் மாவட்ட தி. மு. க. சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு—பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசிடம் அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டிருக்கின்றன. உணவுக்கும் மேம்பாட்டுத் திட்டத்துக்கும் மத்திய அரசையே நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கேரளத்தில் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது என்பது தெரிந்தும், வெளியிடங்களிலிருந்து அரிசி வரவழைக்கக் கேரள அரசுக்கு மத்திய அரசு அனுமதி தர மறுக்கிறது.

ஆனால், கேரளத்தின் அரிசிப் பற்றாக்குறைக்குத் தமிழகம் காரணமல்ல; இதனை கேரள மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் அளவுக்கு மிஞ்சி அரிசி இருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். அரிசியைப் பொறும் தவரையில் தமிழ்நாட்டிலும் பற்றாக்குறைதான் இருந்து வருகிறது.

கேரளத்துக்கு அரிசி செல்ல மட்டும் தமிழக அரசு தடை விதிக்கவில்லை. தமிழ்நாட்டிற்குள்ளேயே மாவட்ட அளவில் உணவுத் தானியம் செல்வதற்கும் தடை விதித்துள்ளோம்.

தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கிட மத்திய அரசின் உதவி கிடைத்திருந்தால் தமிழகம், கேரளத்துக்கு மட்டுமன்றி, மற்ற பற்றாக்குறை மாநிலங்கட்கும் தமிழகம் அரிசி வழங்கும் நிலைமையை எய்தியிருக்கும்.

இந்திக் கடிதத்துக்கு இந்தியில்தான் பதிலளிக்க வேண்டுமாம்

சுய ரூபத்தைக் காட்டுகிறது டெல்லி அமைச்சரவை!

புதுடில்லி, சூன் 8—

இந்தியில் வரும் கடிதங்களுக்கு இந்தியிலேயே பதிலளிப்பதை உறுதி செய்யுமாறு மத்திய அமைச்சகங்கள்—அவற்றோடு இணைந்த அலுவலகங்கள் ஆகிய அனைத்தும் கோரப்படுமாம்!

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தச் சிக்கல் தலைகாட்டியதாகத் தெரிகிறது; 'அண்மையில் நிறைவேறிய ஆட்சிமொழிச் சட்டத்திற்குப் பின்னும், எந்த அமைச்சுத் துறையேனும் இந்த முறையைப் பின்பற்ற முடியவில்லை எனக் கூறுவதற்கு மன்னிப்பு ஏதும் இருக்கக்கூடாது' என்றும் கூட்டத்தில் கருதப்பட்டதாம்!

அதையொட்டியே தொடக்கத்தில் கண்டபடி முடிவெடுக்கப்பட்டுள்ளதாம்!

போட்டியிடுவார்!

இலண்டன் சூன் 8—

"காலஞ்சென்ற இராபர்ட் கென்னடியின் இளைய சகோதரர் செனட்டர் எட்வர்டு எம். கென்னடி, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவார்"

என்று இலண்டன் இதழ்கள், செய்தி வெளியிட்டுள்ளன.

நாங்கள்
ஆசிரியர் இரா.செழியன்
நிருவள்ளுவராண்டு 1999 வைகாசி 26 (8—6—68) சனி

கென்னடி மறைவு

கயவன் ஒருவனின் துப்பாகிக் குண்டுக்கு இலக்கான இராபர்ட் கென்னடி, இருபத்தினான்கு மணி நேரம் உயிருக்குப் போராடி இறுதியில் இறந்துவிட்டார். அவரைடைய மூகியில் பாய்ந்த துப்பாக்கித் தோட்டா, அவருடைய உயிரைக் குடித்து விட்டது.

கென்னடியின் உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் மேற் கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. அவருடைய உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்த நேரத்தில், 'கென்னடி உயிர் பெற்றுவிட்டார்' என்ற நற்செய்தியைக் கேட்டிட உலகம் துடித்துக்கொண்டிருந்தது; ஆனால், 'கென்னடியின் உடல்விட்டு உயிர் பிரிந்துபோய்விட்டது' என்ற சோகச் செய்தியையே உலகம் கேட்க வேண்டிய தாயிற்று.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் டெமோகிராடிக் கட்சியின் வேட்பாட்டைப் பெறும் முயற்சியில் இராபர்ட் கென்னடி ஈடுபட்டிருந்தார். வேட்புக்கான அடிப்படைத் தேர்தல்கள் அமெரிக்க நாடு முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அடிப்படைத் தேர்தல்களில், கலிபோர்னியாவிலும், தென் டகோடாவிலும் அவருக்குக் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்தது.

ஒரேநாள் அடிப்படைத் தேர்தலில் தமக்கு ஆதரவு குறைந்து விட்டது போலவே, கலிபோர்னியாவிலும் ஆதரவு குறைந்திருக்கும் பட்சத்தில், டெமோகிராடிக் கட்சியின் சார்பில் வேட்பாளராகக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிற்கும் வாய்ப்பு தமக்கு இருக்காது என இராபர்ட் கென்னடி, வெளிப்படையாகவே கூறியிருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்தபடியே மாநாடுகள் கலிபோர்னியாவிலும், தென் டகோடாவிலும் அவருக்குப் பெரும ஆதரவு கிடைத்துவிட்ட தனால், டெமோகிராடிக் கட்சியின் வேட்பாளராகத் தலைவர் தேர் தலில் போட்டியிடுவதற்கும், அமெரிக்கக் குடியரசுத் தலைவராக வெற்றி பெறுவதற்கும் கென்னடிக்கு நல்ல வாய்ப்பிருந்தது.

தமது அரசியல் எதிரகாலத்தை உணர்த்தும் இந்த நல வாய்ப்பு, அவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் மிக்க மகிழ்ச்சி யைக் கொடுத்தது. அதே நேரத்தில், கென்னடிக்கு கிடைத்த வெற்றி—அவருடைய அரசியல் பகைவர்களுக்கு—அவரைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும் என்ற கெடுமதியைக் கொடுத்து விட்டிருக்கிறது.

ஏறக்காழ ஐந்தாண்டுகளுக்கு முன்னர்—அதாவது 1963-ம் ஆண்டு நவம்பர் திங்களில்—இவருடைய அண்ணனும் அமெரிக்கக் குடியரசுத் தலைவருமான ஜான் கென்னடி, டல்லாஸ் நகரத் தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். இதுமுன்றி, இரண்டு திங்களுக்குமுன், 'அமெரிக்கக் காந்தி' எனச் சிறப்பித்து அழைக் கப்பட்டுவந்த நிரவாகிமு மார்ட்டின் லூதர் கிங் என்ற நீக்ரோக் களின் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்விரண்டு படுகொலை களையும் செய்த பாதகர்கள், இன்றளவும் கண்டறியப்படாமலே உள்ளனர்.

இதுபோன்று அல்லாமல், இராபர்ட் கென்னடியைச் சுட்டுக் கொன்ற கயவன், கைத் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள் ளான். அக்கொலைஞன் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்தவன் என்றும், அமெரிக்காவில் குடியேறி இருப்பவன் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

'இஸ்ரேல் நாட்டுக்கு ஆயுத உதவியை அமெரிக்கா நிறுத்தி விட்டது தவறு' என இராபர்ட் கென்னடி கண்டித்திருப்பது, அவனுக்கு ஆச்சிரத்தை மூட்டியிருக்கக்கூடும் என்று கூறப்படு கிறது. 'இத்தினங்கள் ஜூதாம் நாளுகளுள் கென்னடியை தீர்த்துக் கட்டிவிட வேண்டும்' எனத் தன்னுடைய நாட் குறிப்பில், அவன் எழுதி வைத்திருக்கிறான் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இது உண்மையாக இருக்குமட்சத்தில், கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது, அமெரிக்க அரசியலில் மட்டுமல்லாது உலக அரசியலிலும் ஒரு கொந்தளிப்பை உண்டாக்கும் எனவும் எதிர்பார்க்கக்கூடியதே. இப்படி உலக அரசியலில் ஒரு கொந் தளிப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இராபர்ட் கென்னடி, தமது இலட்சியங்களையும் நோக்கங்களை யும் மூடிவைத்திருக்கவில்லை. அண்ணனைப் போன்றே நீக்ரோக் களின் நன்பராகவும், தேமுறைகளும் கென்னடி விளங்கினார். வெள்ளை நிறத்தவருடன் சரிசமத்துவமாக வாழ்ந்துவர நீக்ரோ மக்களுக்கு உரிமை பெற்றுத் தருவதுதான் தமது குறிக்கோள் என்பதை வெளிப்படையாக அவர் அறிவித்திருந்தார்.

வியட்காம் போரைப் பற்றியும், இன்றைய அமெரிக்கக் குடி யரசுத் தலைவர் போக்கை முழு மூச்சாக எதிர்த்தும் வந்தவர் கென்னடி. நீத்துறையில் தாம் கொண்டிருந்த கொள்கைக ளுக்காகவே அமெரிக்க மக்களின் தீர்ப்பிடியும் வந்திருக்கின்றார்.

தாம் கொண்டிருந்த இந்த இலட்சியங்கள் அனைத்தும், இந்த இலட்சியங்கள் ஏற்றுக்கொள்ளாதவர்களின் பகையையும் வெறுப் பையும் இராபர்ட் கென்னடிக்குத் தேடித் தந்திருக்கிறது. இன்று அவரைச் சுட்டுக்கொன்ற கயவனுக்கு கொண்ட கொள்கை களினாலாக கென்னடிக்கு எதிரான தூண்டு திரண்டிருந்த பகை ,ளுக்கு அளவில்—எந்த முறையில் தூண்டிவிடப்பட்டிருக்கிறது என்ற உண்மை, இனிதான் தெரிந்தாக வேண்டும்.

துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுவது என்பது, அமெரிக்கா வில் இன்று நிதமே நிழ்சியாகிவிட்டது. சென்ற ஏராளமான மட்டும் ஏறத்தாழ 6000 கொலைகள் துப்பாக்கிச் சூட்டினுல் நடை பெற்றிருக்கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. இதுவரை 1968-ம் ஆண்டில் மட்டும் இருபது இலட்சம் துப்பாக்கிகள் அமெரிக்கக் குடிமக்களுக்கு விற்கப்பட்டிருக்கிறதாம். பெரிய

கிராமக் குடிநீர்த் திட்டங்களில் தமிழக அரசு காட்டும் அக்கறை

அதிக நிதியுதவி அளித்திட டில்லியிடம் கோரிக்கை

அண்ணு மணிவிழா ஆண்டுத்திட்டங்கள்--அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, சூன் 7—

"கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு இப்போது ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 15,000 வீதம் மானியம் ஒதுக்கப்படுகிறது; இந்தத் தொகையுடன் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன் றியங்கள் தங்கள் நிதியையும் ஒரளவு சேர்த்துக் குடிநீர் வசதிப் பணிகளுக்குச் செலவிடுகின்றன; ஆயினும் இந்தத் தொகையைக்கொண்டு ஒரளவுக்குதான தேவையை ஈடு கட்ட முடிகிறது. மானியத் தொகை பெருமளவுக்குப் போத வில்லை; இதற்குறைக்கு இன்னும் அதிக மானியத் தொகை ஒதுக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட் டத்தில் முறையிடப்பட்டது; அரசு இப்பிரச்சினையின் முக் கியத்துவத்தையும் அவசியத்தையும் நன்கு உணர்ந்து இருக் கிறது.

"இம்மாதம் சென்னையில் கூடவிருக்கும் அனைத்து இந்திய முத லமைசசர்களை மாநாட்டில் இப்பிரச்சினையைக் குறித்து முத லமைச்சர் அண்ணு அவர்கள் எடுத்து விளக்குவார்; 'கிராமக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இன்னும் அதிக அளவு மானியம் ஒதுக்கித் தரப்படவேண்டும்' என்று மத்திய அரசை தமிழக அரசுச் சார்பில் அவர் வற்புறுத்துவார்"

என்ற தகவலை உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அண்ணு மணிவிரூத் திட்டம்

செப்டம்பர் 15-ஆம் நாள் கொண்டாடப்படவிருக்கும் முதல் அண்ணு அவர்களின் மணி விழாவையொட்டி மாவட்டந் தோறும் மேற்கொள்ளப்பட்டிருக் கும் 'ஒரண்டுத் திட்டப் பணி' களின் முன்னேற்றங்கள்—அவை இதுவரை சாதித்துள்ள பணிகள் இன்னும் முடிக்கப்படவேண்டிய நட வடிக்கைகள் முதலியவைகளைக் குறித்து விவாதிக்கக் கோட்டை யில் மாவட்ட ஆட்சித் தலைவர் களின் கூட்டம், அமைச்சர் முத்து சாமி தலைமையில் நடந்தது. இக் கூட்டத்தில் மதுரை, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவிர, மற்ற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

"முதல் அமைச்சரின் மணி விழாவையொட்டி மேற்கொண் டிருக்கின்ற 'ஒரண்டு வளர்ச் சிப் பணிகள் யாவும் அதனதன் இலக்கை ஏறக்குறைய அடைந்து திட்டமிட்டபடி முடி வடைந்து கொண்டிருக்கின் றன என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்; இன் னும் முடிவடையாமல இருக்கும் பணிகளை முடிக்க எடுத்துக் கொள்ள வேண்டிய கூடுதல் நடவடிக்கைகளையும் தாங்களாக எடுத்துக் கொள்வதாகவும் அவர்கள மேற்கொண்டு வாக களித்தார்கள்"

என்றும அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

ஒரண்டுத் திட்டப் பணிகளில் ஒன்றான கோடை விடுமுறைக் காலத்தில் பள்ளிகளுக்குச் சீருடை யினர் சுண்ணுப்பு அடித்தல், தப் பாவு செய்தல், குறைப்பாக்களை எழுதுதல் போன்ற பணிகள் பெரும்பாலும் முடிந்து விட்டன வென்றும் அப்படியும் முடியாமல் இருக்கும் சிற்சில பணிகளின் மேற்படி பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

முதல் அமைச்சரின் சென்ற ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது, இந்த ஒரண்டுத் திட்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள் ளப்பட்டன என்பது நினைவுக்கு வரலாம்.

மாற்று இருதயம் பொருத்துவதன் மூலம் மரணம் தவிர்க்கப்படுமா?

சட்டச் சிக்கல் எழுகிறது

வாகனங்களில் பழுதடைந்த பாகங்களைக் கழற்றி விட்டு, புதிய பாகங்களைப் பொருத்து வதுபோல், மனிதனின் இரு தயம் கண் ஆகியவை கெட்டுப் போனால் அவற்றிற்குப் பதிலாக வேறு இருதயம் -- கண் ஆகிய வற்றைப் பொருத்தும் புரட்சிகர மான முறையை மருத்துவ நிபு ணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மாற்று இருதயம் பொருத்து வதன்மூலம் மரணத்தைத் தள் ளிப் போட இயலுகிறது!

மாற்று உறுப்பு பொருத்துவதன் கரணமாக, மனிதனின் மரண நிலை என்பது குறித்து சட் டச் சிக்கல் எழுந்துள்ளது மூலி யிலிருந்து 'சமிக்ஞைகள்' கிளம்பாமல் இருக்கும் நிலைக்குத் தான் மரணம் என்று மாத்து வழி முறையில் இவரை கூறப்பட்டு வந்தது; ஆனால் தற்போதைய மருத்துவக் கண்டுபிடிப்புகளுக் குப் பின்னர், இதை ஏற்பதற்கு இல்லை.

மருத்துவத் துறையில் புதிய புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இரண சிகிச்சை முறைகளில் எத்தனையோ முன் னேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

நோயாளியின் பழுதடைந்த இரு தயத்தை அகற்றிவிட்டு, அப் போதுதான் இறந்தவரின் இரு தயத்தைப் பொருத்துவதில் தென் ஞப்பிரிக்க மருத்துவ நிபுணர் பெர் னார்ட் முதன்முதலாகச் சாதனை ஒன்று ஏற்படுத்தினார்; ஆனால், இச்சாதனையில் சில சட்டச் சிக் கல்கள் இருக்கின்றன. மூளியிலிருந்து சமிக்ஞை அலைகள் கிளம்பாமல் இருந்தால், மரணம் தொடங்கு கிறது என்ற கருத்துக்கு இனிமேல் இடமில்லை.

'சாவு'க்குப் பல மணி நேரத்திற் குப் பின்னர், மீண்டும் மூளியிலி ருந்து சமிக்ஞை ஒலிகள் கிளம்பு வதை இரு நெர்மன் டாக்டர்கள் எடுத்துரைத்தனர். எனவே, தற் போதைய விஞ்ஞான -- மருத்துவ முன்னேற்ற நிலை அடிப்படையில், மருத்துவர்கள் அடங்கிய குழு, மரணம் என்பதற்கு திட்டவட்ட மான விளக்கம் தெரிவித்தது.

செல்லுகிறது--

[illegible]ரோதே!

[illegible]ப்பட்டிருக்கிறது.

இவ்வித தீ யணைக்கு என்சின் இது ஒன்றுதான்.

சாலியில் சென்றும், கு வழியில் ஆறுகளைக் கடந்து சென்று தீ யணைக்கும் ஆற்ற வாய்ந்தது இது இதன் வி ரு ' இலட்சம் ஆகிறது.

குற்றங்கள் அனைத்தையும் துணிந்து செய்யக்கூடிய கயவர் களுக்கே இத்துப்பாக்கிகளில் பெருந்தொகை விற்கப்பட்டிருக் கிறது எனக் குடியரசுத் தலைவர் ஜான்சன் அவர்களே அறிவித் திருக்கின்றார்.

இராபர்ட் கென்னடியின் இறப்பு, ஜான்சன் அவர்களே விழிப் படைய வைத்திருக்கிறது. முன்னுள் குடியரசுத் தலைவர் ஐசனெ வர் சகோதரராக மில்டன் ஐசனோர் தலைமையில், அமெரிக்கர் வில் வன்முறைச் செயல்கள் வளர்ந்துவருவதற்கான காரணத்தை ஆராய்க் குழு ஒன்றை அவர் நியமித்திருக்கின்றார்.

கண்ட கண்டவர்களுக்குத் துப்பாக்கி விற்கப்படுவதைத் தடுப் பதற்கான சட்டம் ஒன்றை நிறைவேற்ற ஜான்சன் எடுத்த முயற்சி இதுவரையில் வெற்றி பெறவில்லை. இரியாவது. இத்துறையில் அவர் முயற்சிசசு அமெரிக்க நாடாளுமன்றம் முட்டுக்கட்டை போடாது என நம்புவோமாக!

கயவனின் குண்டுக்குப் பலியான இராபர்ட் கென்னடி, 42 வயதையும் நான்காத இன்னுராவார். அவர் இந்த இளம் வய தினேயே, பல அரசாங்கப் பொறுப்புக்களில் இருந்திருக்கின்றார்!

அண்ணுராவ ஜான் கென்னடி குடியரசுத் தலைவராக இருந்த நேரத்தில், இராபர்ட் கென்னடி அட்டார்னே-ஜெனரலாக இருந்து, குற்றவாளிகளின் கடுந்தண்டனைகளுக்குள்ளாகுவதில் கண்டிப் பாகவும், கடுமையாகவும்—அதே நேரத்தில் நேர்மையாகவும் செயல் பட்டிருக்கின்றார்.

பத்துக் குழந்தைகளின் தந்தை, பு[illegible]குடு[illegible] பிறந்தவர். டெமோகிராடிக் கட்சியின் [illegible] கப்பட்டு—தேர்தலிலும் வெற்றி பெற்[illegible] பொறுப்பேற்று—ஸல்ல பல பணிகளை[illegible] தார் அவர். வயது முதிர்ந்த பெற்றோர்க[illegible]

இவ்வளவு சிறப்பியல்புகளைக் கொண்ட [illegible] யைச் சுட்டுக் கொன்று விட்டதன் மூலம், [illegible] அமெரிக்காவிற்கும் கிடைத்திடவிருந்த நல்விடி[illegible] திற்பதற்குள் அழித்துப் போட்டுவிட்டான் பிரக[illegible] தாங்கிய அக்கயவன்.

கொள்கைக்குக் கொள்கை—இலட்சியத்துக்கு இலட்[illegible] இவற்றிற்கிடை மோதலுக்கு இரப்துதான் முறை—நியாயம்—வரவேற்கத்தக்கது. கொள்கையைக் குலைக்க, அக்கொள்கையைக் கொண்டிரு பவரை வன்முறை மூலம் தாக்குவதும், உயிரைப் போக்குவதும் கயமையாகும்—காட்டுமிராண்டித்தனமாகும். இக் காட்டுமிராண்டித்தனம் ஒழிய வேண்டும்.

—கா. கு.

'சித்திரப் பாவை'— முத்தமிழுக்கோர் புதிய சேர்க்கை!

அல்லாதனவற்றை ஒதுக்காததுபோலவே நல்லனவற்றை வரவேற்று வளரச் செய்யாததும் ஒரு குற்றமே!

'அறிமுகம்' பெற்றவர்களிடம் 'குறை' கண்டாலும் 'ஆதரவு முகம்' காட்டும் கலை ரசிகர்கள், அறிமுகம் பெற்றிருக்க வேண்டிய வர்களிடம், 'பாராமுகம்' காட்டுவதும் மற்றொரு குற்றம்தான்!

புதிதும் புதுமையும், விறுவிறுப்பும் வேகமும் நிலவும் சென்னைத் திருநகரில், 'தரமும் சுவையும் போட்டியிடும் ஒரு கலைப் படைப்பு கவனத்தையும் கருத்தையும் ஈர்த்தே தீரும்' என்ற குறிக்கோளில் வெற்றி காணும் வகையில், செல்வி **ஜலிலா** தயாரித்து அளித்திருக் கும் 'சித்திரப் பாவை' நாட்டிய நாடகம், நல்ல முயற்சியாகப் பரிமளித் திருக்கிறது!

"இத்தனைச் சிறப்பான சிகழ்ச்சி என் இத்தனை நாட்க ளாகத் தெரிந்திருக்கவில்லை? இவ்வளவு அருமையான ஆக்கம் ஏன் என்னும் பரவலில்லை?"

என்ற இரு கேள்விகளும், கடந்த வியாழனன்று தென்னகப் பல்கலைக் குழுவினர் சார்பில்—சென்னை அண்ணாமலை மன்றத்தில், செல்வி மல்லிகாவின் நாட்டிய நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்தவர் களின் இதயங்களில் எழாமல் போகவில்லை!

கோவலனுவும் கண்ணகியாக வும் மட்டுமே திரையிலும் அரங் கிலும் இதவரை பொதுமக்கள் அ ளவில் அறிமுகமான இளங்கோவடிகளின் காப்பியம், கலை வடிவில் மாதவியாக மணம் பரப்பும் அரிய பங்கினை, இரண் டரை மணி நேர அளவில் கண்டு மகிழும் வகையில் தந்திருக்கும் மல்லி கா, பாரதப்பேரரிவர் என்பதன், 'கலை உள்ளங் களின் நன்றிக்கும் உரியவர்' எனவும்தான உண்மையான திறமையாளராக இருக்க முடியும்.

'நாடகம்' என்பதே புதுமை; 'நாட்டிய நாடகம்' என்பதோ அதனினும் புதுமை; அதனி லும் திரை படம்போல், விரை வும் கலையும் கூட்டித் தந்திருப் பது அரியதோர் சாதனை!

மொழிக்காக எடுத்தாளும் தேசதே விதத்தர்கள்யும் தவற வைப்பது இலக்கியம்; ஆனால், தமிழுக்கே சிறப்பளிக்கும் சிலப் பதிகாரத்தினை, ஒரு தந்தைக் கலைப் படைப்புக்காகப் பயன் படுத்தியிருக்கும் முயற்சியில் முழு வெற்றி கண்டிருக்கிறார் கள்—மல்லிகா குழுவினர்!

உரை நடைகளைக் கேட்பது டோலவே இருக்கிறது; ஆனால் டேட்டோ, கருத்தும் கவர்ச்சி யும் மிக்க இசைப் பாடல்கள்! இடையிடையே வருவதோ, சிலப்பதிகாரத்திலிருந்து சில வரிகள் — 'ஈ ளாமே கை' யி லிருந்து பல சொற்கள்—திருக் குறளிலின்றும் ஒரிரு பாக்கள்!

'எளிமையான பாடல் களானே' என்று சருத்துகளை ஏது மை வைக்கலில்லை; உரை னத்துக்கு ஒன்று:—

'பெண்மையின் அரசே' என்று மாதவி ஒலிக்கலில் அழைக் கப்படுகிறாள்; ஆனால் மாத வியோ, கண்ணகியைப் பற்றி மதுரெரிக்கில், 'கற்புக்கரசி' என்று விளிக்கிறாள்!

காப்பிய நயத்துக்குக் குந்தகம் வந்துவிடவில்லை; காலத்திற்கு ஏற்றவாறு கலைப் படைப்பாக மாற்றினலும், பாத்திரங்களின் குணநியங்களுக்கு மேலும் மெருகு தரலாம் என்பதற்கு மேற்கொன சான்று வேண்டும்!

செல்வி மல்லிகா, உடலால் நாட் டிய நங்கையாகவுள்ளத்தால் மாதவிப் பெண்ணாக மாறிவிடு கிறார்! 'நாட்டியநாடகம்' என்ற படைப்புக்கு ஏற்றபடி, நடனத் தாலும் நடிப்பாலும் மொத்த நிகழ்ச்சிக்கும் உயிர் ப் பாகத் திகழ்கிறார்!

சிலப்பதிகாரத்தின் சிறப்புகளில் ஒன்றாக இருக்கும் கான காட்சியும், 'சுகம் து காணத் தூவுகே மாதவியின் வாழ் ம், இந்த கண்ணகி

கலை ரசி மாதவியை துறவு பூணச் செய்த சருத்துக்கே, இதையில் உயிர்ப்புடன் வேறு எவராக இருந்தாலும் பின படுத்திருக்க முடியுமா எனபது சங்தேகமே!

கலேஞர் கருணாநிதி, சிலம்பச் செல்வர் ம. பொ சி. ஆகியோ ரால் பெரும் பெருமையும் தலைக் தமிழக மக்களுக்கு அறி மு ப்படுத்தப்பட்டவரும் சிலப் பதி ாரத்தின் மாண்புக்கும் உயர்வுக்கும், செல்வி மல்லி னவின் 'சித்திரப்பாவை' நாட்டிய நாடகமும் உறுதுணை புரிவதை ஒ ப்புகொள்வதற்கு, அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் தயங்கவேமாட்டார்!

வாழ்வில் இறப்போரும், இறப் பில் வாழ்வோரு இழைந்து பினைந்து கடமாடும் தமிழகத் தில், இறப் பில் வாழும் இளங்கோ அடிகள், செல்வி மல்லிகாவின் நாட்டிய நிகழ்ச்சி யில் உருவாய், உயிராய்— பொதிகைமலைத் தென்றலாய்— அறங் கூறும் அண்ணலாய்— சாவா மூவாத் தமிழாய் உலா வருகிறார்!

'எளிமை'யில் 'முழுமை'யைத் தந்திருக்கின்றனர்—ஒளி அரங்க நிர்மானம் போன்ற அம்சங் களில்! ஐந்து அல்லது ஆறு பாத்திரங்கள் அவ்வப்போது தோன்றும் இந்த இசை நாடகத் துக்கு 'உயிர்' கொடுத்தவர்கள் இரண்டே பேர்கள்தான் என் பதனைப் பார்த்தவர்களும் நம்ப மாறுப்பார்கள்! அந்த அளவுக் குச் சாதனை படைத்துள்ளனர்—செ னனியிலிருந்து பாடியவர்கள்!

தாருண்ட நிலைத் தன் தலை யாலே தரும் தென்னையைப் போல, வாஞ்முட்டும் தமிழ் பயின்ற பன்மொழிப் புலவர் அவர்கள் தம் செல்வியின் மூலம் கலையுலகத்துக்குத் தந்து நிருக்கும் இந்தப் படைப்பு முத்தமிழுக்கோர் புதிய சேர்க் கையாக இருக்கிறது!

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய மாநராட்சி மன்ற உறுப்பினர் திரு. சா. கணேசன் குறிப்பிட் டதுபோல், தமிழ்ப் பணியில் ஈடுபட்டுவரும் அப்பா துரை யாரும், பொதுப் பணியில் ஈடு பட்டுவரும் அம்மாவோ அம்மை யாரும், செல்வி மல்லிகாவின் கலைத் திறமையினால், என்ற பொழுதினும் பெரிதுவக்கலாம்!

[illegible]

கயத்தாற்றில் சீரணிப் பணி

சயத்தாறு ஊராட்சி ஒன்றியத் தைச் சேர்ந்த சமுகுமேத் தொகுதி சீரணியினரால் துரை சாமிபுரம் ஊராட்சிமன்றத்திறகு உள்பட்ட இராமாநதபுரம் கிராமத் தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை வெள்ள அடிக்கும் பணியை, 26—5—68-ல் 8-மணி யளவில் கயத்தாறு ஊராட்சி ஒன் றிய கல்வி விரிவு அதிகாரி துவக்கி வைத்தார்.

காலை 8-மணியளவில் தவக்கப் பட்ட வேலை மாலை 2-மணியளவில் முடிவுற்றது. வேலையின் மதிப்பு ரு 85. கிராம மக்கள் சீரணியின் பணியைப் பாராட்டினர்.

வீரப்பன் சத்திரத்தில் சீரணிப் பணி

24—5—68-ல் ஈரோடு ஊராட்சி ஒன்றிய சீரணித் தொண்டர் களால் வீரப்பன்சத்திரம் ஆதார உயர்நிலப் பள்ளிக்கு வெள்ள அடிக்கப் பட்டது.

அது போது அவர்களுடன் 5 மணாது கமக உறுப்பினர்களும், திரு. வி. க. தமிழ் மன்ற உறுப் பினர்களும், பள்ளி ஆசிரியர் களும் பணியாற்றினார்.

அன்வருக்கும் மத்திய உணவும் மாலையில் சிற்றுண்டியும் திரு.வி.க தமிழ் மன்றத்தினரால் வழங்கப் பட்டன.

கழகத் தொழிற் சங்க வெற்றி

சவுர்படையாய் கட்டுநருவும் பண் டக சாலையின் ஒ இடத்திற்கு 28—5—68 அன்று தேர்தல் நடந் தது.

இந்து டன்ஸர் சபா, கம்பு னிஸ்டு, தி. மு. க. ஆகிய தொழிற் சங்கங்களின் ஆதரவுடன்—தி. மு. கழகத் தொழிற்சங்கச் சார்பில்— கே. மாரிமுத்துவும், ஐ. என். டி. யூ. சி. தொழிற்சங்க மாவட்ட சங் கத் தலைவியைலாளர் சி என். ராங்காதனும் போட்டியிட்டனர்.

தி.மு.க. தொழிற்சங்கச் சார் பில் போட்டியிட்ட கே. மாரிமுத்து 68 வாக்குகள் பெற்று வெற்றி யடைந்தார்.

பெங்களூர் --- அக்ராவரம் சின்னசாமி நினவு மன்றம்

பெங்களூர் 19-வது வட்டம் சின்னசாமி நினவு மன்ற கிர் வாகிகள் தேர்தல் திரு. மா. மன் னர் அவர்களின் தலைமையில் நடை யாளராகக்கொண்டு நடைபெற்ற தது; தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பின் வருமாறு:—

அவைத் தலைவர்: வெ சண்முகம்; செயலாளர்: எம். சி கருணாகரன்; துணைச்செலாளர்: ஏ. கண்ணன்; பொருளாளர்: சி. வீரையப்பா மற்றும் 15 செயற் குழு உறுப்பினர்கள்.

இருக்கும்.

மாசு ஏதுமில்லாத மாதவியின் கதையை, மாசு எதுவுமில்லா மலே நந்திருக்கும் மாதவி வினரின் முயற்சியை கலை உலக கம் வரவேற்று ஆதரிக்கக் கட மைப்பட்டிருக்கிறது.

— எஸ். வீ.

அண்ணு தலைமையில் 'யாழ் நங்கை'

செல்வி மல்லிகாவின் நாட்டிய நாடகம் அரங்கேற்றம்

பன்மொழிப் புவலர் கர. அப்பா துரையாரின் மகள் செல்வி மல்லிகாவின் புதிய நாட்டிய நாடகமான 'யாழ் நங்கை'யின் அரங்கேற்றம் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில், 10—6—68 மாலை 6-45 மனிக்கு மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கலையரங்கில் நடை பெறும்.

இங்காட்டிய நாடகம், திரு விக்ரி மன் (மேப்) அவர்களால் எழு தப்பட்டதாகும்.

பத்தாண்டுக் காலத்தில் பத்து மடங்கு வருவாய் பெருகியது

சாதாரண எழுத்தராக இருந்தவர் பெருஞ் செல்வராக உயர்ந்த இரகசியம்!

பத்தாண்டுகளுக்கு முன்னுல், மதுரை மாவட்டம் வில்லாட்டத் னைச் சேர்ந்த குப்புசாமி என்பவர், கிராமக் கூட்டுறவுச் சங்கம் ஒன் றில் எழுத்தராக சுமார் ரு 300 ஆண்டு வருமானம் பெறுபவர் தார். இன்று அவர், மிட்டத்தட்ட ரு 30,000 ஆண்டு வருமானம் பெறும் செல்வராகத் திகழ்கிறார்.

எப்படி இந்த மாறுதல் ஏற்பட் டது? எழுத்தர் வேலை பார்க்கை யில் ஏதோ ஒன்றுமனதில் உறுத் தவே, அவர் அந்த வேலையை உதறிவிட்டு தமது 32 ஏக்கர் புன்செய் நிலத்தைச் சாகுபடி செய்ய ஆரம்பித்தது, கடுமையாக உழைத்தபின் இனறு அது பலித்து வருகிறர். காலோறும் பதது மனி நேர மும் உழைப்பு பதுதான்குளுக்குப் பிறகு இந்த நிலையைத் தகதிருப்பதில் வியப்பு இல்லைலவா?

நிலக்கடலை சாகுபடிதான் அவ ருக்கு மிகவும் பிடித்த வேலை சென்ற ஆண்டில் அவர், பத்து ஏக்கர் நிலத்தில் நிலக்கடலையைப் பயிரிட்டார். ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 2,100 கிலோ கிராம் வீதம் நிலக்கடலை கிடைத்தது; அதை உலர்த்தி, சுத்தம் செய்த பிறகு ஏக்கர் ஒன்றுக்கு 1,102.5 கிலோ கிராம் நிகரமாகக் கிடைத்தது.

இந்த மாறிலத்திலேயே இவ் வளவு உயர்ந்த விளைச்சல் இது வரை ஏற்பட்டதில்லை. இந்தப் பயிரின் மூலம் அவருக்கு ரு. 15,750 மொத்த வருமானம் கிடைத்தது. அவர் செலவு செய் திருந்தது, ரு. 5,530 மட்டுகனான. இதுபோக அவர், ரு. 13,420 நிகர இலாபம் பெற்றார்.

நிலக்கடலையைத் தவிர வீரிய நெல்லூர், சோளம், கரும்பு ஆகியவற்றையும் அவர் பயி ரிட்டு வருகிறார். அவரது பண்ணை யில் இரண்டு பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார். கன்கு தேர்ந்த சாதனங்களையே அவர் பயன் படுத்துகிறார்.

பொதுமக்கள் பிராவிடண்ட் நிதித் திட்டம்

தனியாகத் தொழில் நடத்துவோர் சேமிப்புக்கு வகை செய்யும்

பொதுமக்கள் பிராவிடண்டு நிதித் திட்டத்தை ஏற்படுத்துவதற் காக அண்மையில் நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்ட சட் டம், நாட்டு மக்களின் சமூக வாழ்வை மேம்படுத்துவதற்கான மற்றொரு நடவடிக்கையாகும்.

சொந்தமாகத் தொழில் செய்து வருமானதைத் தாட்டுவோருக்கும் பிராவிடண்டு நிதி மூலம் சேமிப்புச் செய்யும் வசதி இப்போது இல்லை. புதிய திட்டப்படி, சமூகத்தின் எல் லாப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் பிராவிடண்டு நிதி மூலம் சேமிப்பு செய்து, அவவித் சேமிப்புகளும் கிடைக்கக்கூடிய வருமான வரிச் சலுகைகளையும் பெற முடியும்.

சொந்தமாகத் தொழில் செய் யும் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வணிகர்கள் ஆகியோர்களுக்காக, உத்தேசிக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் பிராவிடண்டு நிதித் திட் டத்தில் பல வசதிகளாமான அம் சங்கள் இருக்கும். வேறு பிராவி டண்டு நிதித் திட்டங்களைப்போல் அல்லாமல், இந்தத் திட்டத்தில் எவரும் சேரலாம்.

இந்தத் திட்டத்தில் சட்டமாம் எதுவும் கிடையாது பிராவிடண்டு நிதித் திட்டத்தில் சேருவது குறித் தும், குறைந்தபட்ச — அதிகபட்ச ரம்புக்கு உட்பட்டு எவ்வளவு தொகை செலுத்துவது என்பது குறித்தும் மக்களே முடிவு செய்ய லாம்.

இந்த நிதிக்குச் செலுத்தப்படும் தொகைக்கு, அவ்வப்போது அறி விக்கப்படும் விகிதத்தில் வட்டி கிடைக்கும். பிராவிடண்டு நிதிக்கு அரசு பணம் செலுத்தாது; ஆனால் தற்போதுள்ள பிராவிடண்டு நிதி யங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு வரிச் சலுகைகளும் உத்தேசிக்கப் பட்டிருக்கும் இந்தத் திட்டத்துக் கு கிடைக்கும்.

வருமான வரிக்காக வருமானத்தைக் கணக்கிடும்போது, பிராவி டண்டு நிதிக்குச் செலுத்தப்பட் டிருக்கும் தொகையில குறிப்பிட்ட சதவிகிதத்தை கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.

வட்டியாகவே, வேறுவிதமா கவோ பிராவிடண்டு நிதியிலிருந்து கிடைக்கும் பணத்திற்கு வரி விதிப்பு இருக்காது. பிராவிடண்டு நிதியிலிருக்கும் பணத்திற்கு ச் சொத்து வரியிலிருந்து விலக்கும் உண்டு.

தனி நபரின் கடனுக்காகப், பிரா விடண்டு நிதியிலிருக்கும் பணத்தைப் பறிமுதல் செய்யும் படி எந்த நீதிமன்றமும் உத்தரவிட முடியாது.

பிராவிடண்டு நிதியிலிருந்து பணத்தைப் பெறுவதற்கான விதி முறைகளை பிராவிடண்டு நிதித் திட்டத்தில் வகை செய்யப்பட் டிருக்கிறது; ஆனல், முதல் ஐந்து ஆண்டுகளுக்கு நிதியிலிருந்து பணத்தை எடுப்பதற்கு அனுமதிக் கப்படுவதில்லை. சில நிபந்தனை களுக்குப்பட்டு, நிதி செலுத்து வோர் தங்கள் நிதியிலிருந்துகடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டொன்றுக்குக் குறைந்த பட்சம் ரு. 100-லிருந்து அதிக பட்சம் ரு. 15,000-வரை பொது மக்கள் பிராவிடண்டு நிதிக்குப் பணம் செலுத்தலாம். எவ்வளவு எவ்வளவு தவணைகளில் பணம் செலுத்த முடியும் என்பதை சந்தா தாரரே முடிவு செய்யலாம். இதற்கு பிறகு பிராவிடண்டு நிதிப் பணத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் சந்தா தாரர் குறிப்பிடலாம்.

இந்திய அரசின் சார்பில் பொது மக்கள் பிராவிடண்டு நிதித் திட் டத்தை ஸ்டேட் பாங்கி அலுவல கங்களும் அதன் துணை பாங்கி களும் நடத்தும். நிதிக்கான சந்தா வைப் பெற்றுக்கொண்டு பாஸ் புத்தகங்களை வழங்கும். நிதி யிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்வதற்கும் இந்த பாங்கிகள் உதவி புரியும்.

பொதுமக்கள் பிராவிடண்டு நிதித் திட்டம் இந்த ஆண்டு ரூலை முதல் நாளிலிருந்து ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

காவல் நிலையத்தைத் தாக்கியதால் தற்காப்புக்காகச் சுட்டனர்

கரூர் துப்பாக்கிச் சூடு பற்றி மாநிலத் தலைமைப் போலீசு அதிகாரி விளக்கம்

சென்னை, ஜூன் 7—

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூரில் போலீசு நிலையத்தைத் தாக்க முயன்றவர்களைமீது போலீசார் துப்பாக்கியால் சுட்டனர்; இதில் நால்வர் காயமடைந்தனர்; இதுபற்றிப் போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் திரு. ஆர். எம். மகாதேவன் அறிவித்திருப்பதாவது :—

"கரூரில் நடந்த ஒரு கோயில் திரு விழா வின் போது ஒரு போலீசுப்பிரிவிருந்து இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமு போலீசார் வழக்குப் பதிவு செய்துகொண்டிருந்த போது, போலீசு நிலையத்துக்கு வெளியே 400-பேர் கொண்ட கூட்டம் ஒன்று சென்று அவர்களை விடுவிக்கு மாறு கோரியது.

'விடுமீறை செய்வதற்கில்லை' எனப் போலீசுத் தரப்பில் கூறப்பட்ட வுடன், வெளியில் கூடியிருந்த வர்கள், போலீசு நிலையத்தின் மீது சரமாரியாகக் கற்களை வீசினர்; இதனால் போலீசு நிலையத்தின் மேற்கூரையும், கண்ணாடி சன்னல்களும் பலத்த சேத மடைந்தன.

இத்தாக்குதலின்போது போலீசு நிலையத்தில் ஒரு தலைமைப் போலீஸ்காரரும், ஓர் ஏழுத் தரும், நான்கு போலீசுக்காரர் களும் மட்டுமே இருந்தனர்.

போலீசு நிலைய மதிற்சுவரைத் தாண்டிக்கொண்டு கூட்டம் உள்ளே நுழைந்ததும், போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; கூட்டத்தினர் மேலும் அதிகமாகக் கற்களை வீசினர்.

கலெக்டு செல்வதற்காகப் போது மான எச்சரிக்கைகள் தரப்பட்டது; அதன் பிறகும் கூட்டம் கலையா மல் எல்லையில்லே ற்படுத்தலால், போலீசார் தற்காப்புக்காக நான்கு ரவுண்டுகள் சுட்டனர். இதனில் கூட்டம் கலைந்து; இப்போது நிலவரம் அமைதி யாக இருக்கிறது"

மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட போலீசுத் தலைமை அதிகாரியும் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர்; காய முற்ற மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நால்வரையும் அவர்கள் பார்த்தனர்.

இன்சுலேட்டர் தொழிற்சாலையில் நடந்ததென்ன?

காவல்துறை அதிகாரி விளக்கம்

சென்னை, ஜூன் 8—

"சென்னை அருகே தொழிலாளர் களிடையே ஏற்பட்ட மோதலைத் தவிர்க்கும் பொருட்டுப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கண்ணீர்ப்புகை குண்டு கனை வீச நேரிட்டது. ஆனால், இம்மோதலைத் தவிர்க்கத் துப் பாக்கிப் பிரயோகம் எதுவும் நடைபெறவில்லை; அவ்வாறு கூறப்படுவது தவறு"

என்று தமிழகப் போலீசு இன்ஸ் பெக்டர்—ஜெனரல் ஆர். எம். மகாதேவன், செய்தியாளரிடம் கூறினர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது :—

சென்னையை அடுத்த ஸ்ரீபெரும் புதூரிலுள்ள டயோபூ டிவி, ஒளி ஒலிபரப்பு நிறுவனத்தில் தொழிற் தகராறு காரணமாக வேலை நிறுத் தம் நடந்தது; ஆலையும் சில தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர்.

வெளிக்குச் சென்ற தொழிலாளர்கள் தடுக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. இதனைத் தொடர்ந்து கற்கள், கட்டைகள் வீசப்பட்டதாகவும், ஒரு வண்டி காசப்படுதி தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த மோதலைத் தவிர்ப்பதற் குப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; ஆனலும், தொடர்ந்து கல்வீச்சுச் சம்பவங் கள் நடந்ததால் இறுதியாகப் போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் அந்தக் கம்பெனி இருக்கும் பகுதியில் ஒரு வாரத்திற்கு 144 தடையுத்தரவு விதிக்கப்படு மென்றும் தெரிகிறது.

திருச்சியில் அமைச்சர் கருணநிதி பிறந்த நாள் விழா

ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு

"9—6—68 மாலை திருச்சி நகரத்தில் மாவட்ட தி.மு.க. சார்பில், அமைச்சர் திரு. கருணநிதி அவர்களின் 45-வது பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

"அதனேபோட்டி நடைபெறும் ஊர்வலத்திலும், மதரம் திடலில் நடைபெறும் பொதுக்கூட்டத் திலும் அமைச்சர் கருணநிதி அவர்களும், மாவட்ட தமிழக அமைச்சர்களும், ம. பொ. சிவ ஞானம், அபகுல் சமத் எம்.பி., மாரிசாமி எம்.பி. ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

"நகர உட்கிளைத் தோழர்கள், படிப்படகாசார்பு மன்றங்களைச் சார்ந்த தோழர்கள் ஆகியோர் நகரத்தை அலங்கரிக்கும் முயற்சியில் ரூபாயுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, விழாக் குழுத் தலைவர் அறிவிக்கிறார்

இரயில்வேத் தொழிலாளர் சங்கத் தலைவர்களுடன் கழக எம்.பி.-க்கள் சந்திப்பு

பழிவாங்கப்பட்ட பயர்மேன்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வற்புறுத்தல்

சென்னை, ஜூன் 9—

"பழிவாங்கப்பட்ட சகாக இரயிலே பயர்மென்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று சமீக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. செழியன், முரசொலி மாறன், மாயவன், மற்றும் தொழிற்சங்கத் தலைவர் பராங்குசம் எம்.எல்.சி., பால் டேவிட் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இந்துப் பேச்சுவார்த்தை, பயர்மென் தொழிலாளர்சம்பந்திய தாக இருந்தது; பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், தணடிக்கப் பட்ட தொழிலாளர்களுக்குத் தண்டனை ரத்து செய்ய வேண்டு மென்றும் அமைச்சரிடம் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைக் குறித்து விசாரித்து ஆவன செய்வதாக அமைச்சர் சதுர்வேதி உறுதியளித்தார்.

நெல்லிக்குப்பம் நகர தி.மு.க. கிளைத்தேர்தல்

தலைமைக் கழக ஆணையாளர் கே. செங்குட்டுவன்

நெல்லிக்குப்பம் நகர தி. மு. க. கிளைத் தேர்தல்களை 9—6—68 அன்று கடைவிலைக்கத் தலைமைக் கழகச் சார்பில் ஆணையாளராக அனுப்பி நடத்தப்பட வேண்டும் என்று நகர-வட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டதற்கேற்ப, தலைமைக் கழகச் சார்பான ஆணையராக கழகப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் நிய மிக்கப்பட்டிருக்கிறார்.

நெல்லிக்குப்பம் நகரக் கிளை நிர் வாகிகள், வட்ட — மாவட்டக் கழகத் தோழர்கள், தோழர் கோ. செங்குட்டுவன் அவர் களின் பணிக்கு உறுதுணையும் ஒத்துழைப்பும் தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

—தலைமைக் கழகம்
(தி. மு. க.)

ஈரோடு நகர உட்கிளை (வார்டு வாரி) தேர்தல்கள்

தலைமைக் கழக ஆணையாளர் கே. கோவிந்தசாமி

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி, ஈரோடு பெரு நகரத்தின் விரிவாக்கப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் உட்கிளைத் தேர்தல்கள் நடத்திவைக்கத் தலைமைக் கழகச் சார்பில் தேர்தல் ஆணையாளராகத் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஈரோடு பெருநகரக் கிளை நிர்வாகிகளும், தோழர்களும், வட்ட -- மாவட்ட நிர்வாகிகளும், ஈரோடு நகர உட்கிளைத் தேர்தல்களில் ஆணையாளருக்கு உறுதுணையும் ஒத்துழைப்பும் தந்து தேர்தல் கனிச சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம்
(தி. மு. க.)

வள்ளுவர் விழா

சென்னை 10-வது வட்டம் எம். ஜி. ஆர். மறுமலர்ச்சி மன்றச் சார்பில் 10—6—68 காலை 10 மணிக்கு வள்ளுவர் விழாக் கொண்டாடப் படும்; தலைவர் : அ. லோகநாதன்; கொடியேற்றுபவர்: வெ. அன் பரசு; குழந்தைகட்கு சிலேட்டுகள் வழங்குபவர்: பேபர் டாக்டர் அப்புலைர பேச : இளங்கோ எம்.ஏ.; மு. வேதாசலம் எம் எல்.ஏ.; சிறப்புரை: க. கணேசன், கே. எம். கலைவாபிரான், டி. பி. சுங்கரம், எம். எஸ். மணி கே. குசாலதாஸ், வே. அண்ணமலை.

டி. கே. சீனிவாசன் புதிய முகவரி :

டி. கே. சீனிவாசன்,
33-A/3, ஆலங்காத்த பின்னே
திருவல்லிக்கேணி, [திரு.
சென்னை-5.

தமிழக மின் குழு

ஒப்பந்த அறிக்கை

அடியில் ஒப்பமிட்டவரால் மேற்கண்ட பொருட்கே வங்குவதற்கான உறையிடப் பட்ட ஒப்பந்தங்கள் (Sealed Tenders) வரவேற்கப்படுகின்றன. மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் மாலும் மேழ குறிப்பிட்டுள்ள தேதிகளில் 3 மணி வரை வரவேற் கப்படுகின்றன.

வரிசை எண்	ஒப்பந்த விவரப் பிரதி எண்	பொருள்	ஒப்பந்தங்கள் பெற கடைசி தேதி	டேவனித் தொகை
		7,315 மீ, 6.230 மீ, 9.144 மீ (24 அடி, 27 அடி, 30 அடி) கம்பங் கள் செல்வதற்கு இரும்பு கம்பி களால் மேற்கண்ட இடங்களில் மின்கல் செய்து கொடுப்பது இடங்கள் (Labour Contract)		
1.	4/68	மேட்டூர் அணை	25—6—68	ரூ 200/—
2.	5/68	சேலம்	அன்று	ரூ 200/—
3.	6/68	ஈங்கூர்	மாலை	ரூ. 200/—
4.	7/68	கிருஷ்ணகிரி	3மணி வரை	ரூ 200/—
5.	8/68	100 ஆம்பியர்/500 வால்ட் பியூஸ் கேரியர்	26—6—68 மாலை 3மணி வரை	ரூ 200/—
6.	9/68	610 மி மீ. (இரண்டு அடி) நீளமுள்ள குழல் விளக் குகள் 20 வாட்	28—6—68 மாலை 3மணி வரை	ரூ. 200/—

மேலே குறிப்பிட்டுள்ள நேரத்திற்குள்ளும் தேதிகளிலும் வரும் ஒப்பந்தங்கள் மாலும் அன்று மாலே 4 மணி வாலில் விரும்பி வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன் னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தங்கள் காலம்கடந்து வந்தாலும், குறிப்பிடுள்ள படி வந்தில (Form) வரத் தவறினாலும், டேவனித் தொகைக்கான ரசீது இணைக்கப்பட மல வந்தாலும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்த விவர நிபந்தனைகளும் (Tender Conditions) படிவங்களும் (Forms) அடங்கிய ஒவ்வொரு ஒப்பந்த பிரதியும் ரூ. 5.15 காசு வீதம் (திருப்பித் தரத் தக்கதல்ல) நேரிலோ, பண அஞ்சல் மூலமாகவோ மேட்டூர் மின் இயக்கத் நிட்ட தலைமை கணக்காயரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

நேரலைப்படி ஒப்பந்த விவரப் பிரதி என்னை அவியம் குறிப்பிதல் வேண்டும். ஒப்பந்தப் பிரதிகள் எக்காரணம் கொண்டும் மாற்றத்தக்கதல்ல. ஒப்பந்தப் பிரதிகள் சாதாரண அஞ்சலில் அனுப்படுவும். அலை கெடக்கப்பெருவதிலி அதற்குத் தமிழக மின் வாரியம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்த விவரப் பிரதிகள் விதப் படும். பண அஞ்சல் மூலம் வரும் தொகைக்கான விற்பனைச் 22—6—68-ம் தேதி புடன் நிறுத்தப்படும்.

மேற்பார்வை பொறியாளர்,
மேட்டூர் மின் இயக்கத் நிட்டம், மேட்டூர் அணை தேக்கம்

நடக்க இருப்பவை

9—6—68

கடம்பூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மனிக்கு அழகிரி திடலில்; தலைவர்: எம். ஆர். சஞ்சீத்தனம் பி.எஸ்சி; பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ஏ. இராத்தினசாமி, ஆர். தங்கராசு, பொ. தமிழரசன், யு. எம். சாமி.

தஞ்சை

8-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பழைய மாரியம்மன் கோயில ரோடில்; தலைவர்: எஸ். பெத்தண்ணன்; பேசுவோர்: திருச்சி சௌந்தர ராசன் பி.காம., ஏ. வி. பதி. கிரேசி சேவியர், கே. கண்ணன்.

10—6—68

குடந்தை

17-வட்ட தி. மு. க. சார்பில் வள்ளுவர் விழாவும், கோ. சி மணி எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட்டும்; மாலை 6-மணிக்கு மோதலால் தெருவில்; தலைவர்: வி. பராங்குசம்; பேசுவோர்: சி. பி. பவலவண்ணன் (துணை மேயர்), கோ. சி. மணி எம்.எல். சி., பி. வி. செயராமன்.

கூனிமேடுகுப்பம்

தி. மு. க. சார்பில் 6-30 மணிக்கு [illegible] கோபுரம் ஆர். [illegible] கிருஷ்ணமூர்த்தி [illegible] செல்வராசு, [illegible] டி. ஏ. பாட்சா.

கொடார்

தி. மு. க. சார்பில் 6-மணிக்கு கலிவாணராசு [illegible] தலைவர்: எம். சுபபிரமணியன்; கொடியேற்றுபவர்: ஏ. இராம வியங்கம்; கட்டிடத் திறப்பாளர்: எம். சண்முகம் எம்.எல்.ஏ.; அண்ணு படத் திறப்பாளர்: எம். இராமன் எம்.எல்.ஏ.; பேசு

(8-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கல்கத்தாவைச் சேர்ந்த ஆறுபேர் மீது வழக்கு தொடரப்பட்டது.

ஒரு பாங்கில் கார்ப்பொரேஷ னின் மனேஜிங்-டைரெக்டர் நம் பிக்கை மோசடி செய்ததற்காக அவர்மீது வழக்குத் தொடரப்பட் டது மொத்தம் 30 வழக்குகள் தொடரப்பட்டன.

பரிசீலனே மாதத்தில் 26 வழக்கு களில் குறறங்கள் பெய்ப்பிக்கப் பட்டு தண்டனை வழங்கப்பட்டது. இரண்டு கெசட் பதிவு அதிகாரி களுக்கும், கெசட் பதிவல்லாத 12 அரசு ஊழியர்களுக்கும், 20 தனிப் பட்ட நபர்களுக்கும் கணிசமான அளவு சிறைத் தண்டனே விதிக் கப்பட்டது. அத்துடன் ரூ. 30,300-க்கு அபராதம் விதிக்கப் பட்டது.

வோர்: வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., எஸ். கோவிந்தசாமி, ஏ. கி ரு ஷ் ண மூ ர் த் தி, புலவர் வேங்கைமார்பன், மற்றும் பலர். (சிவகங்கை சேதுராசன் கலை நிகழ்ச்சி உண்டு.)

சிவகாசி

சதியுவாணிமுத்து மன்றத் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு பிச்சாண்டி தெருவில்; தலைவர்: க. சேகரன்; பேசுவோர்: சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சு. ஆறுமுகம், எம். எஸ். மணி, எஸ். எம். பொன்னுசாமி, கே. வி. கே. இராசன், மற்றும் பலர்.

11—6—68

[illegible] 50-வது வட்டம்

[illegible] க. சார்பில் மாலை [illegible] புரசை சுங்கரம் [illegible]ல்; தலைவர்: [illegible] பேசுவோர்: [illegible] காவிங்கராசன் எம. [illegible] அலுவர் டி. ராசா [illegible] பி.எல்., கேரளியன்.

ரோவில் முள்ளோற்றுக் கழகத்தி திரு. இரா. செழியன் எம்.எ., அவர்கள் ஆசியுரையும், வெ. பவராசும், அறிமுகவுரையும் தொ. அழகிரி அச்சுகத்தில் (24, குர்னரசர செட்டித் தெரு, சென்னை-13) அச் னெய்யப்பெற்று,